# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

**தமிழ்மொழியும் இலக்கியமும்**
**(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்)**

**தரம் -11**
**3 மணித்தியாலம்**

**22** **T** **I,II**

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(2) 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க .
(3) உமக்கு வழங்கப்பட்டடுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

## பகுதி - I

1. அணி தேர் புரவி ஆட்பெரும் படையொடு. இங்கு புரவி என்பது
   1. வதிவிடம் 2. குதிரை 3. புரம் 4. யானை
2. நாய் அனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும். இங்கு கேண்மை என்பது
   1. நன்றி 2. குணம் 3. நட்பு 4. பயிற்சி
3. மதியினிற் புலை நாத்திகம் கூறுவர். நாத்திகம் என்பதன் எதிர்பதம்
   1. ஆத்துமா 2. சத்தியம் 3. ஆத்திகம் 4. நித்தியம்
4. “பிறிற்றோ தமது அந்தரங்க நண்பர்கள் மூலம் நாவலருக்கு கடிதங்கள் அனுப்பினார்” இதில் அந்தரங்கம் என்ற சொல்லின் எதிர்கருத்து
   1. பகிரங்கம் 2. அரங்கம் 3. அம்பலம் 4. வெளியில்
5. “பாணன் பாடிப் பரிசு பெற்றான்” இங்கு பாணன் என்பதன் பெண்பாற் சொல்
   1. பாணந்தி 2. பாங்கி 3. பாணினி 4. பாடினி
6. புகையிலை அடுக்கப்பட்டிருப்பது சிப்பம் என்பது போல கருவாடு அடுக்கப்பட்டிருப்பது
   1. தோகை 2. தாள் 3. பாடம் 4. போர்
7. நவீன உலகில் (Digital) புகைப்படக்கருவி மூலம் அழகிய புகைப்படங்களை எடுக்கின்றனர். இங்கு Digital என்ற சொல்லின் தமிழ் வடிவம்
   1. எண்மானம் 2. இறுவட்டு 3. தொலைநகல் 4. இணையம்
8. பசுந்து என்னும் சொல் வழங்கும் பிரதேசம்
   1. வடக்கு 2. கிழக்கு 3. தெற்கு 4. மலையகம்
9. பொருத்தமற்ற சொல்லின் இணைப்பு
   1. நெல் - குவியல் 2. மலை – தொடர் 3. தென்னை - தொகுதி 4. உடு – திரள்

10. அட்டிகை, பரட்டை, ரொக்கம் என்பன எம்மொழிச் சொற்கள் ?

1. கன்னடம் 2. பாரசீகம் 3. அரபு 4. டச்சு

11. உலக நடையறிந்து ஒழுகுதல்

1. ஓம்படை 2. பொதுவியல் 3. ஒப்புரவு 4. உரைகல்

12. கண்ணி, தொடை, ஆரம் என்பன குறிக்கும் ஒரு சொல்

1. மாலை 2. பூ 3. பெண் 4. கால்

13. ஆண் குதிரை குண்டு எனப்படுவது போல ஆண் நண்டைக் குறிக்கும் சொல்

1. கடுவன் 2. அலவன் 3. போத்து 4. கடா

14. மேலெழுந்தவாரியாகக் கற்றல் என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்

1. நுனிப்புல் மேய்தல் 2. மேலான கற்றல் 3. வாய் விடுதல் 4. ஆழமாகக் கற்றல்

15. செய்த தவறை மீண்டும் செய்யாதிருக்க ஒரு முறை ஏற்பட்ட அனுபவம் உதவும் என்பதை விளக்கம் பழமொழி

1. துள்ளின மாடு பொதி சுமக்கும் 2. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது

3. நுணலும் தன் வாயாற் கெடும் 4. ஆனைக்கும் அடி சறுக்கும்

16. மலையும் மலை சார்ந்த இடமும்

1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம் 4. நெய்தல்

17. உற்சாகமூட்டுதல் என்பதைக் குறிக்கும் மரபுத் தொடர்

1. தட்டிப்பார்த்தல் 2. தட்டிக்கேட்டல் 3. தட்டிக்கொடுத்தல் 4. தட்டிக்காட்டல்

18. பட்டம் மேலே மேலே சென்றது

1. அடுக்கு மொழி 2. இணைமொழி 3. இரட்டை மொழி 4. பழமொழி

19. நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து. இங்கு துடும் எனும் ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்துவது

1. கோபம் 2. உறுதி 3. விரைவு 4. அலட்சியம்

20. ஓடும் புளியம் பழமும் போல என்ற உவமைத் தொடரின் பொருளைத் தரும் மற்றோர் உவமைத்தொடர்

1. குரங்கின் கைப் பூமாலை போல 2. நகமும் சதையும் போல
3. தாமரையிலைத் தண்ணீர் போல 4. பூவும் மணமும் போல

21. இழிவான சூழலில் நல்லார் ஒருவர் தோன்றுதலை விளக்குவதற்கு பொருத்தமான உவமைத் தொடர்

1. சேற்றில் முளைத்த செந்தாமரை போல
2. மீகாமன் இல்லாத மரக்கலம் போல
3. உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைதல் போல
4. அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல

22. இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை என்ற பழமொழி தரும் கருத்து

1. சேமித்து வைத்து கெட்டவர் எங்குமில்லை

2. உண்மையைச் சொல்லி கெட்டவர் எங்குமில்லை

3. தருமம் செய்து கெட்டவர் எங்குமில்லை

4. பொறுமையாக இருந்து கெட்டவர் எங்குமில்லை

23. “க”கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1. தங்கம் 2. தீங்கு 3. சங்கு 4. தேகம்

24. “பவன குமாரனை மலர்க்கை பணிந்து நோக்கி” மலர்க்கை என்பது

1. உவமை அணி 2. உருவகம் 3. தன்மை நவிற்சி 4. சிலேடை

25. உடனிலை மெய்ம்மயக்கத்திற்கு உதாரணமாக அமைவது

1. இஞ்சி 2. தெவ்வர் 3. பந்து 4. இவர்

26. கண்டான் என்ற சொல்லின் பகுதியாக அமைவது

1. கண் 2. கண்டு 3. காண் 4. காணு

27. ஆக்கப் பெயர் அல்லாதது

1. ஏவுகணை 2. முயற்சி 3. அறிவாளி 4. அரசியல்

28. குரு நிலத்தில் பாதி இனிக் கொடாது இருந்தால் இங்கு இனி என்பது

1. பெயர்ச்சொல் 2. உரிச்சொல் 3. வினைச்சொல் 4. இடைச்சொல்

29. பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியை தெரிவு செய்க.

1. ஆக்கப்பெயர் - பூக்காரி, மூலதனம், புத்திசாலி

2. கூட்டுப் பெயர் - நீர்வீழ்ச்சி, படிப்பு, புகைவண்டி

3. காரணப் பெயர் - மண்வெட்டி, வளையம், காதணி

4. தொழிற் பெயர் - ஆடுதல், பொரியல், நகைத்தல்

30. 1. பிறவினை – உருட்டுவித்ததான், படிப்பித்தான், நனைத்தான்

2. தன்வினை – உண்டான், எழுதினான், உருண்டான்

3. முற்றுவினை – வந்தான், படித்தான், சிரித்தான்

4. குறிப்பு வினை – நல்லவன், சூரியன், ஓடியது

31. இளைபாறிய அரசாங்க உத்தியோகத்தருக்கு அவர் ஆற்றிய சேவைக்காக மாதா மாதம் ………. வழங்கப்படுகிறது.

1. வேதனம் 2. மானியம் 3. ஓய்வூதியம் 4. சன்மானம்

32. இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதானமாக …….. பிரதிநிதித்துவ முறைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

1. தொகுதிவாரி 2. பிரதேசவாரி 3. வகுப்புவாரி 4. விகிதாசார

33. அரசாங்க சேவை நியமனங்கள் பற்றிய பொது விதிகள் ……… பிரசுரிக்கப்படும்

1. வர்த்தகமானியில் 2. கையேட்டில் 3. விண்ணப்பத்தில் 4. சுற்றுநருபத்தில்

34. பாடசாலைக்கு வருகை தந்த பணிப்பாளர் ……….. புத்தகத்தில் நிறைகளை எழுதிச் சென்றார்

1. சம்பவத்திரட்டு 2. வர்த்தமானி 3. வரவு இடாப்பு 4. பாடப்பதிவு

35. அந்தி நேரம் மேற்கு வானில் நாரைகள் கூட்டம் கூட்டமாகச் ……………..

1. சென்றது 2. சென்றதுகள் 3. சென்றன 4. சென்றனர்

36. நீயும் நானும் அவளும் பவ விடயங்களில் ……………………..

1. ஒத்திருக்கின்றோம் 2. ஒத்திருந்தாய் 3. ஒத்திருப்போம் 4. ஒத்திருந்தான்

தரப்பட்ட பாடலினை அடிப்படையாகக் கொண்டு வினாக்களிற்கு விடை தருக

வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வதைப் போல
துள்ளிய அலைகள் மென்மேல்
கரையினிற் சுழன்று வீழும்!
வெள்ளலை கரையைத் தொட்டு
மீண்டபின் சிறுகால் நண்டுப்
பிள்ளைகள் ஓடி ஆடிப்
பெரியதோர் வியப்பைச் செய்யும்

37. இச்செய்யுள் எவ்வகை நிலக்காட்சியை கூறுகின்றது?

1. மருதம் 2. நெய்தல் 3. குறிஞ்சி 4. முல்லை

38. வியப்பைச் செய்தவை எவை?

1. அன்னங்கள் 2. அலைகள் 3. கடற்கரை 4. நண்டுப் பிள்ளைகள்

39. இங்கு கையாளப்பட்டுள்ள அணி

1. உருவக அணி 2. தற்குறிப்பேற்ற அணி 3. முரணணி 4. உவமையணி

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) ஏனெனில் அந்த இயந்திரத்தை ஆக்கியவன் அவனே

ஆ) எனினும் பாகங்களை மாற்றி வைக்கும் கலையைக் கற்று பல உயிர்களை காப்பாற்றுகின்றான்

இ) மிதிவண்டிக்குத் தேவையான உதிரிப்பாகங்களை மனிதன் செய்து கொள்கின்றான்

ஈ) அந்த அளவிற்கு அறிவியல் இன்னும் வளரவில்லை

உ) ஆனால் மனிதனின் உதிரிப்பாகங்களான எல்லா உடற்பாகங்களையும் அவனே ஆக்க மாட்டான்

1. இ,உ,ஆ,அ,ஈ 2. இ,அ,உ,ஈ,ஆ 3. இ,அ,உ,ஆ,ஆ 4. இ,உ,ஈ,ஆ,அ

(40x1 = 40 புள்ளிகள்)

மாகாணக்கல்வித் திணைக்களம்

வடக்கு மாகாணம்

**மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025**

# தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் - 11** **நேரம் - இரண்டு மணித்தியாலயங்கள்**

**பகுதி 11**

**எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**

**இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

01. சுருக்கமான விடை தருக

1. பின்வரும் சொற்றொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

   கண்ணிலரித் தந்தைதமர் கடுநரகிற் கேயுரியர்

2. "கைதேர்ந்த நிபுணர்கள் போல் புதிய தலைமுறைக்கணிப்பொறி பற்றி அவர்கள் நீண்ட விவாதங்களும் பட்டிமன்றங்களும் நடத்தினார்கள்" இவ் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.

3. இது வந்திருக்கு இது உங்களுடையதா என்றான் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இடுக

4. புத்தகத்தை எடுத்துட்டு வூட்டவா பேச்சு வழக்கில் உள்ள இவ் வாக்கியத்தை எழுத்த வழக்கிற்கு மாற்றி எழுதுக.

5. கலை என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியங்கள் அமைக்குக.

6. செந்தூரன் தேசிய மட்ட தமிழ்தினப் போட்டியில் முதலிடம் பெற்றான்.

   செந்தூரனுக்கு பாடசாலைச்சமூகம் பரிசில் வழங்கியது.

   மேற்படி இரண்டு வாக்கியங்களையும் இணைத்து ஒரே வாக்கியமாக எழுதுக.

7. தமிழர் பண்பாடு காலந்தோறும் மாற்றமடைந்துள்ளது. எனக் கட்டுரை ஆசிரியர் கூறினார். இவ் வாக்கியத்தின் தலைமைத்தொடர், சார்புத் தொடர் என்பவற்றைத் தருக

8. ஜனாதிபதியால் ஆரம்பித்த செயற்றிட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. இவ் வாக்கியத்தில் உள்ள வழுவைத் திருத்தி எழுதுக.

9. ஓடும் என்ற சொல் பெயரெச்சமாகவும் வினை முற்றாகவும் வர வாக்கியங்கள் அமைக்குக.

10. திருந்தினேன் என்ற தன்வினையின் பிறவினை வடிவம் யாது?

(20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக. தலைப்பிடுக.

அ. இறைவன் படைப்பில் இயற்கை வளங்கள் அற்புதமானவை கிடைத்தற்கு அரியவை ஆனால் மனிதனோ சற்றும் சிந்தியாமல் இயற்கை வளங்களைத் துஷ்பிரயோகம் செய்கின்றான். இதன் விளைவாக இயற்கை சமநிலை குழப்பம் அடைகின்றது காலநிலை மாற்றம் அடைகின்றது. பல சவால்களை மனிதன் சந்திக்கின்றான் எதிர்கால மனித குல வாழ்விற்கு இவர்களுடைய செயல் சாபக்கேடாய் அமைகின்றது. எனவே இவற்றில் இருந்து விடுதலை பெற இயற்கை வளத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி 250 சொற்களில் விளக்கக் கட்டுரை எழுதுக

ஆ. ஒரு நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமாயின் அனைத்து துறைகளிலும் மாற்றமடைதல் வேண்டும். அரசியல் சமூக பொருளாதாரம்சார் அனைத்து துறைகளிலும் புதிய சிந்தனைகள் புதிய உத்தி முறைகளை புகுத்துவதன் மூலமே நாடு வளர்ச்சிப் பாதையை நோக்கி பயணிக்க முடியும்

எனும் தூய இலங்கை எண்ணக்கரு தொடர்பாக இளைஞர் கழக ஆண்டு விழா ஒன்றில் நீர் நிகழ்த்திய மேடைப் பேச்சு ஒன்றினை எழுதுக

இ. அறிவியல் யுகத்தில் தொழில்நுட்ப சாதனங்களின் வருகை இன்றைய இளம் சமூகத்தினர் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளமை யாவரும் அறிந்த நிதர்சன உண்மை தொழில்நுட்ப சாதன வருகை பெரும் நன்மையை செய்கின்றது என கூறும் ஒருவருக்கும் இல்லை தீமையே செய்கின்றது எனக் கூறும் ஒருவருக்கும் இடையிலான உரையாடல் ஒன்று எழுதுக

ஈ. சிறந்த நற்பண்புகளுடன் கூடிய குடும்பம் ஒன்றில் மூத்த மகனாக விளங்கிய குமரன் தனது பாடசாலை காலத்தில் கூடா நட்பின் பிடியில் அகப்பட்டு தாய் தந்தையர் சொல் கேட்காமல் தீய பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டு எல்லோராலும் வெறுத்து ஒதுக்கப்பட்டவனாக தனி மரமாய் நிற்கதியற்றவனாய் பாடசாலை வளாகத்தில் தவிக்கின்றான். ஆனால் அவன் மீதும் அனுதாபம் கொண்ட ஆசான் ஒருவர் கையில் அவன் அகப்பட்டு இன்று அவன் புதிய பிறவி எடுத்த புனிதன் என்ற கருத்துப்பட சிறுகதை எழுதுக.

(25 புள்ளிகள்)

3. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.
சொல் எண்ணிக்கையை குறிப்பிடுக

முதலில் இயற்றமிழினது இன்றைய நிலையை நோக்குவோம். பண்டை நாட்களிற் போலல்லாது இக்காலத்திலே நாளுக்குநாள் நூற்றுக்கணக்கான சஞ்சிகைகள், மலர்கள், இதழ்கள், நவீனம் சிறுகதை முதலியவை திரள்திரளாக வெளிவருகின்றன. இவை யாவும் ‘‘மறுமலர்ச்சி நடை’’ எனப்படும் ஒரு புது வகையான நடையில் எழுதப்படுகின்றன. இம் மறுமலர்ச்சி நடையோவென்றால் ஒரு வகையான ‘‘சாம்பார் நடை’’ ஒரு சிறிது செந்தமிழ் நடையோடு ஒரு கூட்டத்திற் பேசும் பேச்சுத் தமிழையும் சேர்த்து இந்தி, ஆங்கில முதலிய பிறமொழிச் சொற்களை நேரடியாக ஒரு மாற்றமுமின்றி அடுக்கித் கொதிப்பித்து வசனங்களாக ஆக்கப்பட்டது. இந்நடை இது அவற்றை எழுதுவோருக்கும் அவர் கூட்டத்தாருக்குமின்றி ஏனையோருக்கு நன்கு விளங்காது. ஆனால் இவ் வெளியீடுகள் கண்ணை கவரும் படங்களோடு அச்சிடப்படுகின்றமையின் இவை விலை போகின்றன போலும். இவற்றிலே கணக்கற்ற சிறுகதைகளும் கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. இவை யாவும் அவற்றை எழுதும் ஆசிரியரின் சொந்த சரக்கென்று கூறமுடியாது. ஒரு சில ஆசிரியரின் கற்பனையில் எழுந்தவையாக இருக்கலாம். பெரும்பாலானவை எங்கோ பிற மொழியிலுள்ள கதைகளினின்றும் எடுக்கப்பட்டு தலைகால் நுள்ளி ஒன்று சேர்த்து புடம் போட்டு சொந்தமாக்கப்பட்டவை: அன்றியும் இதனைத் தவிர பிற பொருள்களைப்பற்றி கட்டுரை எழுதுபவரின் நூல்களையும் எடுத்துக்கெள்வோம் ஓர் ஆசிரியர் பத்து நூல் எழுதினால் ஒரு நூலில் எழுதியதையே மற்றைய நூல்களிலுந் திருப்பித் திருப்பி வேறு வசனங்களில் அமைத்துச்சொல்வார். ஆனால் இவ்வாறு எடுப்பதிலும் பார்க்க நேரே பிறமொழி நூலைத் தழுவியோ அன்றேல் மொழி பெயர்த்தோ எழுதினால் நன்றாக இருக்கும். இந்த நூல்களிலே காணப்படும் தமிழ் மக்களின் பெயரை பாருங்கள். ஆவையாவன: நாத், ப்பிரபா, ப்பிரேமா, ப்ரேம்சந்த், அனுத்மா, குமார் பெயர்கள் மட்டும் இப்படி என எண்ணுதல் வேண்டாம். இந்த நூல்கள் எடுத்துக் கூறும் வாழ்க்கையும் தமிழ்நாட்டுக்கு அப்பாற்பட்டது இது ஒரு புறமிருக்க ‘‘HURRYUP’’, ‘‘VERYGOOD’’ என்ற ஆங்கிலச் சொற்கள் பேச்சுத் தமிழோடு வழங்கிய காலம் போய் ‘‘ஜல்தி’’ அச்சா ‘‘சலோ’’ முதலிய இந்திச் சொற்கள் தமிழில் இடம் பெற்று ‘‘இந்தி பிரவாளம்’’ என்னும் நடைக்கு அடிக்கோலுகின்றன. இதற்குப் பக்கத்துணையாக தமிழ்நாட்டு வானொலி நிலையங்களிலும், பாடசாலைகளிலும் இந்தி பாடம் கற்பிக்கப்படுகின்றுது.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

மாட்டுச் சவாரிக்கலை தோன்றிய வரலாற்றை கவனிக்கலாம். மாடு என்பது தமிழ்ச்சொல். சவாரி என்பது உருது மொழி வழியாக தமிழுக்கு வந்த சொல். சவாரி என்றால் ‘‘வண்டி முதலியவற்றில் செல்லுகை’’ என்பது பொருள். மாட்டுப்போட்டி ஓட்டம் தமிழ்நாட்டில் பல காலம் இருந்து வந்துள்ளது. எருதை மையமாக வைத்து நடக்கும் பொங்கல் விழாக்கள் தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ளன. மாடும் நாயும் தமிழ் மக்களின் நண்பர். ‘‘மாட்டு விழா’’ எடுப்பது தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபு. தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் நிகழ்வது மாட்டுப் பொங்கல். இப்பொழுது யந்திரக் கலப்பை வந்துவிட்டது. அந்தக் காலத்தில் மாடு இல்லாமல் கமத்தொழில் இல்லை போக்குவரத்து இல்லை செக்கு இழுப்பதும் மாடு தான். பொங்கலைத் தவிர சல்லிக்கட்டு என்னும் வீர விளையாட்டு இன்னும் தமிழ்நாட்டில் வழக்கில் உள்ளது. ஐரோப்பாவிலும் தென் அமெரிக்காவிலும் உள்ள ‘‘எருதுடன்

மோதுதல்'' விளையாட்டில் எருது இறக்கும், அது கொல்லப்படும். உயிர்மீது அன்புடைய தமிழ் மக்கள் சல்லிக்கட்டு வீர விளையாட்டின் போது எருதை கொல்வதில்லை, அதனை மடக்கிப் பிடிப்பர்.

1) சவாரி என்ற சொல் எந்த மொழியில் இருந்து வந்தது?

2) சவாரி என்பதன் பொருள் யாது?

3) தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபு எது?

4) தமிழர் வாழ்வியிலில் மாடுகளின் முக்கியத்துவம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

5) தமிழ் மக்களின் இரக்க மனப்பாங்கு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

(10 புள்ளிகள்)

5. கணேசபுரம் பெண் தலைமைத்துவ குடும்பங்களை அதிகமாகக் கொண்ட ஒரு பிரதேசமாகும். இங்கு உள்ளவர்கள் தமக்குரிய உணவைப் பெற்றுக் கொள்ளவும் பிள்ளைகளுக்கான கல்வி வசதிகளை செய்து கொடுக்கவும் முடியாத வறுமை நிலையில் இருக்கின்றனர். பல்வேறு குடிசைக் கைத்தொழில்களையும் செய்வதற்கான திறமையும் ஆர்வமும் இவர்களிடம் உள்ளது. எனினும் குடிசைக் கைத்தொழில்களுக்கான சிறிய இயந்திரங்களை கூட வாங்கும் வசதியற்றவர்களாக இவர்கள் உள்ளனர். இப்பிரதேச பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சங்கத்தின் செயலாளர் க.இந்துமதி என உம்மைக் கருதிக் கொண்டு குடிசைக் கைத்தொழிலுக்கான இயந்திரங்களை தந்துதவுமாறு கோரி கணேசபுரம் பிரதேச செயலருக்கு 100 சொற்களில் கடிதம் ஒன்று எழுதுக.

அல்லது

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்று கூறப்படுகின்றது. மயிலங்கூடல் என்ற குக்கிராமத்தில் வாசிப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டு நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் வாசிப்பதற்கு போதுமான நூல்களுக்குப் பெரும் பற்றாக்குறை காணப்படுகின்றது. வீடுகளில் பயன்படுத்தப்படாது உள்ள நூல்களைத் தந்துதவுமாறு பொதுமக்களைக் கோரி மயிலங்கூடல் வாசகர் வட்டத்தினரால் வெளியிடப்படும் துண்டு பிரசுரம் ஒன்று 100 சொற்களை அமையுமாறு எழுதுக.

(15 புள்ளிகள்)

மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

**மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025**

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

**தரம் - 11** **நேரம் - இரண்டு மணித்தியாலயங்கள்**

**பகுதி III**

**1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) **சுருக்கமான விடை தருக**

1. "எட்டுணையானும் இராவது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது"
I) இப் பாடலடி வெளிப்படுத்தும் இனிது என குறிப்பிடப்படும் விடயம் யாது ?
II) இராவது தான் ஈதல் என்ற அடியின் சிறப்பு யாது ?

2. " அவருக்கு ஒருவகை வயிற்று வலி இருந்தது அவர் அந்த வலியை மாற்றாமல் தமது பிரார்த்தம் என்று கருதி அதை அவர் ........"
I) இங்கு அவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார் ?
II) பிரார்த்தம் என்பதன் பொருள் யாது ?

3. "வந்து விட்டாயா ! வந்து விட்டாயா "! என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டேன்
I) வந்து விட்டாயா ! என்று கூறியவர் யார் ?
II) வந்து விட்டாயா என குறிப்பிடப்படுவது எதனை ?

4. "கிழங்கு கிள்ளித் தேனேடுத்து வளம் பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை யிடிப்போம்"
I) இச் செயலை செய்பவர்கள் யாவர்?
II) வெம்புதினை என்ற சொல் உணர்த்துவது எது?

5. "அவ் இரக்கம் இலாளையும்
தன் நல் கையின் வணங்கினன்"
I) இரக்கம் இலாள் என குறிப்பிடப்படுபவர் யார்?
II) "நல் கையின் வணங்கினான்" என குறிப்பிடப்படுபவர் யார்?

6. "உயிருடன் சென்ற ஒரு மகள் தன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்"
I) உயிருடன் சென்றவள் யார்?
II) "செயிருடன் வந்தவள்" எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

7. "வாடுகின்ற மடப்பாவை தன் வரமும்
என் வரமும் வழுவா வண்ணம் கோடுக்கின்ற மொழியவன்…"
I) மடப்பாவை எனக் குறிப்பிடப்படுபவர் யார் ?
II) "என் வரமும்" என்பதில் "என்" எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

8. "மூடருக்கும் பேடருக்கும் முதியோர் மெலியோர்க்குந்
தேடருநல்லிரத்தினம் போற் றெரிவையரைச் சேர்த்துவரோ…."
I) பேடர், மெலியோர் என்பதன் பொருள் யாது ?
II) இங்கு கையாளப்படட அணி யாது?

9. “யாதும் ஊரே யாவரும் கேளிர் “
   I) இவ் அடி இடம்பெற்ற இலக்கியம் யாது?
   II) “கேளிர்” என்ற பதம் தரும் பொருள் யாது ?

10. “மழை வெய்யில்ல நனையாம அவவ கொண்டு போகணும் ”
காவி படிந்த பற்களை இளித்து சிரித்துக் கொண்டார் ”
   I) இவ்வாறு கூறியவர் யார் ?
   II) அவ எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

**(10X2 = 20 புள்ளிகள்)**

2) பின்வரும் செய்யுட் பகுதியையும் உரைநடைப் பகுதியையும் வாசித்து அதன் கீழ் வரும் வினாக்களிற்கு விடை எழுதுக

I. காத்திருந்தவள் போம் வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார்ந்து களித்திட
யாத்த தேருளைப் படு மேழை தான்
யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றென
கோத்த சிந்தனையோடேகி யதில் மகிழ்
கொண்டு நாட்கள் பல கழிந்திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல்
புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்

அ. ஐம்புலன்கள் எவை?
ஆ. இங்கு குறிப்பிடப்படும் அணியை எடுத்துக்காட்டி விளக்குக

II. கூட்டிற் பசுங்கிளி போற் கோதையரை யெப்பொழுதும்
வீட்டிலடைத்து வைக்கும் விரகிலருக்கி யாதுரைப்போம்
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாகக் கருதினரோ?
கேட்டோர் நகைப்பதுவும் கேட்டிலரோ பைங்கிளியே!
கிஞ்சுகவாய்ப் பைந்தொடிபாற் கிளத்தாய் பசுங்கிளியே

அ. பெண்ணடிமைத் தனங்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?
ஆ. விரகிலர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

III. தச்சன் செய்த சிறு வையம்
ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்து இன் புறூஉம் இளையோர் போல்
உற்று இன்புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே

அ. தலைவனின் சிறப்பு யாது?
ஆ. அளபெடைச்சொல்லை இனங்கண்டு எழுதுக.

IV. இப்படியாக சந்தி பிரிக்காத பாடல் போல தலை சுற்றியது விவகாரம். மறுபடியும் நான் அந்தக் கடைக்கு கம்பியூட்டரை கொத்து கொத்தாக ஆராய்ச்சி செய்து வித்துவான் பட்டம் பெற்ற ஒரு நண்பரோடு படையெடுத்தேன். நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர். விடுவாரா? இப்போது வட்டியும் முதலுமாக அவர்களைப் போட்டுக் குடைகுடையென்று குடைந்தார்.

அ. தலபுராணம் என்றால் என்ன?
ஆ. நண்பனின் சிறப்புகளாக விபரிக்கப்பட்டவை எவை?

V. சினிமா மொழியின் மூன்றாவது முக்கிய அம்சம் படத்தொகுப்பு. தனித்தனியாக ஒலிப்பதிவு செய்யப்பட்ட காட்சிப் படிமங்களும் ஒலிப்பதிவுகளும் ஒரு அர்த்தமுள்ள கோவையாக அமைக்கப்படுவது. இதை சினிமா இலக்கணத்திற்கு அடித்தளம் எனலாம். எப்படி இந்தக் கோர்வை அமைகிறதோ அந்த விதத்திலேயே அந்த நிகழ்ச்சித் தொடரின் அர்த்தமும் மாறும்

அ. படத்தொகுப்பு என்றால் என்ன?

ஆ. சினிமா இலக்கணத்திற்கு அடித்தளம் எனக்குறிப்பிடப்படுவது எது?

**(5X4 = 20 புள்ளிகள்)**

3) பேதைமை என்ற அதிகாரத்தில்

அ. பேதைமை என்பதன் வரைவிலக்கணம்

ஆ. பேதையர் இயல்புகள்

இ. இங்கு கையாளப்பட்டுள்ள அணிச்சிறப்புகள்

ஆகியவற்றை விளக்குக

அல்லது

"கிருட்டிணன் தூதுச்சருக்கம்" பகுதியில்

அ. தருமனின் பொறுமை

ஆ. வீமனின் ஆவேசம்

இ. அத்தினாபுரத்தின் சிறப்பு

ஆகியவை வெளிப்படும் வகையினை விளக்குக

**(15 புள்ளிகள்)**

4) மூத்தம்மா என்ற சிறுகதையில்

அ. மூத்தம்மாவின் ஆளுமை

ஆ. கிராமிய வாழ்வியல் அம்சங்கள்

ஆகியவற்றை விளக்குக.

அல்லது

இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையில் இலட்சியவாதிகள் பின்வருவோரின் இலட்சியங்களை விளக்குக.

அ. தருமன்

ஆ. மாணிக்கவாசகர்

இ. அரிச்சந்திரன்

**(15 புள்ளிகள்)**

5) பங்கப்பழனத் துழுமுழவர் என்ற பாடலை அடிப்படையாகக் கொண்டு

அ. சோழ நாட்டின் சிறப்பு

ஆ. சோழ மன்னனின் வீரம்

ஆகியவை வெளிப்படும் வகையை விளக்குக

**(10 புள்ளிகள்)**

6) சீறி ஓடாத வருங்கால நதி என்ற கவிதையில்

அ. இளைஞனின் அழகு

ஆ. கவிஞரின் ஆதங்கம்

ஆகியவற்றை விளக்குக

**(10 புள்ளிகள்)**

7) நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்

அ. நாவலரின் ஆளுமை

ஆ. கட்டுரை ஆசிரியரின் மொழிநடை என்பனபற்றி கருத்துரைக்க

**(10 புள்ளிகள்)**